**செய்தி வெளியீடு எண்:777** **நாள்: 15.11.2017**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சார்ந்த செல்வன் ஆகாஷ் மனோஜ் அவர்களுக்கு மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் சிறந்த சாதனை புரிந்த குழந்தைக்களுக்கான தேசிய விருது வழங்கியதையடுத்து அனுப்பிய வாழ்த்து கடிதத்தின் விபரம்:

மாரடைப்பு ஏற்படுவதை முன்கூட்டியே அறியக் கூடிய சிறிய கருவியை புதியதாக கண்டுபிடித்த தங்களுக்கு, மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் சிறந்த சாதனை புரிந்த குழந்தைக்களுக்கான தேசிய விருது வழங்கப்பட்டதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன். இந்த விருதினை பெற்ற தங்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாங்கள் வருங்காலங்களிலும் இதுபோன்று பல புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தி, மேலும் பல விருதுகளை பெற்று தமிழ் நாட்டிற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என மனமார வாழ்த்துகிறேன்.

*******

**வெளியீடு : இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, சென்னை 9.**

**நாள் : 15.11.2017**